T-UN-668

தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர்

மலர் 3 | திருவள்ளுவராண்டு 2015 — ஐப்பசி 29 | 14—11—1984 | இதழ் 8

இரங்கல் அறிக்கை



இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி 31—10—84 -இல் எதிர்பாராதவிதமாக உயிரிழந்தார்.

இந்திய ஒற்றுமைக்கும் உலக சமாதானத் திற்கும் பாடுபட்ட ஒரு தாய் வன்முறையில் கொல்லப்பட்டார் என்று கேட்டு தேசம் நடுங்கு கிறது. உலகம் ஏங்குகிறது.

பல மொழிகள், பல மதங்கள், பல இனங்கள் என்று பிரிந்து கிடக்கும் பரந்த இந்திய நாட்டினைப் பொறுமையும், விரிந்த மனப்பான்மையும் அடிப் படையாகக் கொண்டு, உறுதியுடன் கடந்த பதினாறு ஆண்டுகளுக்கு மேலாக கட்டிக் காத்து வந்தார்.

கூட்டுசேரா நாடுகளின் தலைவியாக, வல்லரசுகளின் மதிக்கத் தக்கத் தலைவராக உலகம் போற்றும் நிலையில் உயிர் நீத்தார்.

விஞ்ஞானம் வளர்த்தற்கும், அறிவியல் அறிஞர்கள் உலக நாடுகளில் தலைநிமிர்ந்து நிற்ப தற்கும், இந்தியக் கலைகள், பண்பாடுகள் அனைத்தும் உலக அரங்கில் பெருமை எய்துவதற்கும் வழி வகுத்தவர்.

எந்திரப் புரட்சியால் பொருளாதார முன்னேற்றத்திற்குத் திட்டம் தீட்டியவர். இளைஞர் களை ஊக்குவித்துப் புது இந்தியாவை உருவாக்க பல முயற்சிகளைக் கையாண்டார்.

குண்டுகள் தாக்க உயிர் நீங்கியது என்று கேட்டதும் இந்திய மக்கள் ஒவ்வொருவரும் அழுகின்றனர். நாட்டு நலனைக் காக்கும் வேறு தலைவி அல்லது தலைவன் யார்? யார்? என்று செயலற்று கேட்கின்றனர். குடியரசு நாட்டில் இத்தகைய விபத்துகள் நடக்கும் போது தேச நலனைத் தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட தலைவர்கள், அறிஞர்கள், தொண்டர்கள் அனைவரும் ஆசுவாசம் பெற விரைவில் நல்ல முடிவை எடுப்பர்; நாமும் முடிவு செய்ய வேண்டும்.

சில சீக்கிய தீவிரவாதிகள் இதனைச் செய்த தாகச் செய்திகள் கூறுகின்றன. சீக்கிய மக்கள் அனைவரும் உலகின் எந்தப் பகுதியிலிருப்பினும், இதற்கு எதிராக, இதற்கு உடனே பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். சீக்கியமக்களைப் பாதுகாப்பது, பண்பட்ட இந்திய மக்களின் பொறுப்பு என்பதையும் மறந்துவிடலாகாது. தமிழ்ப் பல்கலைக் கழக ஊழியர்கள் ஒவ்வொருவரின் மனம் கசிந்த துயரத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வ. அய். சுப்பிரமணியம்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் டி.லிட். பயிற்சி

இளம் ஆய்வாளர்களிடையே பலதுறைப் பயிற்சி மற்றும் மேம்பட்ட ஆய்வாற்றலை வளர்த் தற்காகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் டி.லிட் பயிற்சி ஒன்றினை வகுத்துள்ளது.

இப்பயிற்சியில் சேர விரும்புவோர் சிறந்த ஆய்வு நோக்குடன் இந்திய அல்லது வெளிநாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றில் பி.எச்.டி. பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

வேண்டுகோள், காலவரையறை, கட்டணங் கள் பற்றிய விவரங்களையும், விதிகளையும் பல்கலைக் கழகப் பதிவாளரிடமிருந்து அறியலாம்.

மொரீசியசில் குடியரசுத் தலைவர் கூறிய திருக்குறள்

அண்மையில் மொரீசியசுத் தீவில் சுற்றுப்பயணம் செய்த இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு செயில்சிங், திருக் குறளை மேற்கோள் காட்டி இரு நாட்டு மக்களின் நட்புறவை விளக்கினார். ''உண்மையான நட்பு என்பது முகத்தில் தோன்றும் சிரிப்பால் ஏற்படுவதன்று. உள்ளத்து அன்பின் பெருக்கால் உருவாகும் மகிழ்ச்சியே உண்மை நட்பு ஆகும்'' என்ற திருக்குறள் கருத்தைக் கூறினார்.

— 'தினமணி' நாளிதழ், 23.10.84

உலகில் கலைச் சொல்லாக்க அமைப்புகள்

உலகில் பல மொழிகளிலிருந்து அறிவியல், தொழிலியல் செய்திகளை மொழிபெயர்க்கும் பணியையும் கலைச்சொற்களை ஆவணப் படுத்தும் பணியையும் 278 அமைப்புகள் மேற்கொண்டுள்ளன. பல்வேறு துறைகளைச் சார்ந்தோரும் தமது மொழி பெயர்ப்பு மற்றும் ஆவணங்களில் பொருத்தமான கலைச்சொற்களைப் பயன்படுத்தத் துணைசெய்யும் நோக்குடன் இவ்வமைப்புகள் செயல்படுகின்றன. ஏறத்தாழ 31 மொழிகளில் இவ்வகை முயற்சிகள் நடைபெற்று வருவதாகக் 'கலைச்சொல் செயல்பாட்டு வழிகாட்டி' எனும் நூல் தெரிவிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட அமைப்புகளின் நோக்கங்களுடன் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் அறிவியல் பண்ணை அமைப்பு ஒன்றும், கலைச்சொல்வங்கி ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. அறிவியல் பண்ணை, அறிவியல் செய்திகளை உடனுக்குடன் தமிழில் தருவதில் ஈடுபட்டுள்ளது. கலைச் சொற்களைத் தொகுத்தலும், ஆவணப்படுத்தலும், அறிவியல் செய்திகளை மொழிபெயர்ப்பதற்கு உதவுதலும் கலைச்சொல் வங்கியின் பணியாகும். இங்குள்ள தொகுப்பில் நிலைபேறு பெற்ற சொற்கள் மட்டுமன்றி ஏனையக் கலைச்சொற்களும் அடங்கும். பதிலிடு அட்டைகள் மூலம் அவ்வத்துறை வல்லுநர்களிடமிருந்து உரிய கலைச்சொற்களைத் திரட்டும் பணியும் நடைபெறுகிறது.

— அறிவியல் பண்ணை

18 – ஆம் நூற்றாண்டில் சென்னையில் நெசவாளரின் அவல நிலை

பொதுவாக நெய்யும் தொழிலில் ஈடுபட்டவர்கள் மிக ஏழையர். அன்றாட உணவுக்காகவே உழைத்தவர்கள். அவர்கள் தத்தம் தலைவர்கட்கு மட்டுமே அடங்கி நடந்தார்கள். பேச்சுக்குக் கட்டுப்படவில்லையெனில் அடி, உதை கொடுத்து அவர்களிடம் வேலை வாங்கப்பட்டது. அவர்கள் தம் தலைவர்களுக்கு மிகுதியாகவோ, குறைவாகவோ கடன் பட்டிருந்தனர். ஆகவே, சிலர் அடிமைகளாகவே நடத்தப் பெற்றனர்.

(Page 42. Public Despatches to England 1741-42; Records of Fort St. George)

—கே. எம். வேங்கடராமையா,
சுவடிப்புலம்

இலக்கிய நோபல் பரிசு

1984—ஆம் ஆண்டுக்கான இலக்கியத்திற்குரிய நோபல் பரிசு 83 வயதான யரோசுலாவி சொய்ஃபெர்த் என்பவருக்கு அவரது கவிதைத் தொகுப்புக்காக வழங்கப்பட்டுள்ளது. இவர் செக்கோசுலேவேகியா நாட்டைச் சார்ந்தவர். இரவீந்திரநாத் தாகூர் 1913—இல் இப்பரிசைத் தமது 'கீதாஞ்சலி' என்ற கவிதை நூலுக்காகப் பெற்றார்.

— அறிவியல் பண்ணை

சோவியத் யூனியனில் பழங்காலப் புத்தர் கோவில்

சோவியத் யூனியனிலுள்ள உசுபெக்கிஸ்தான் குடியரசைச் சார்ந்த குசான் நகரில் அமுதார்யா ஆற்றின் வடகரையில் அண்மையில் ஒரு புத்தர் கோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கோவில் கி.பி.2 –ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ, 3 –ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலோ கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இங்குக் கிடைத்த பழங்காசுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. மத்திய ஆசியாவில் புத்த மதம் பரவியிருந்தது என்பதற்கு இந்தக் கோவில் ஓர் எடுத்துக் காட்டாகும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

—அறிவியல் பண்ணை

நூற்பரிசு பற்றிய அறிவிப்பு

புத்தம் புதிய துறைகளில் தமிழ் மொழி வளம் பெறும் பொருட்டும் தமிழ்ப் பண்பாடு பற்றிய செய்திகளை உலக மொழிகளிற் படைக்கும் பொருட்டும் தமிழ்ப் பல்கலைக் கழகம் கீழ்க்காணும் தலைப்புகளில் வெளியான நூல்கள் ஒவ்வொன்றுக்கும் 5,000 உருவா வீதம் பத்துப் பரிசுகள் வழங்கும். இப்பரிசுக்காக 1984 -ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10 –ஆம் நாளுக்குள் நூல்கள், செய்தி அறிக்கை வடிவங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

1. தமிழிற் சிறந்த செய்தி அறிக்கைகள், செய்திக் கட்டுரைகள்.
2. ஆட்சித் தமிழ் பற்றிய சிறந்த அறிக்கைகள், நூல்கள், கையேடுகள், கலைச்சொல் அகர வரிசைகள்.
3. சட்டம், மருத்துவம், பொறியியல், வேளாண்மை பிற அறிவியல் துறைகளில் முதல் நூல்களும், பெயர்ப்புகளும்; கலைச் சொல் அகர வரிசைகள்.
4. அரசியல், சமூகவியல், மானிட இயல் முதலிய வாழ்வியல் துறையில் முதல் நூல்களும், பெயர்ப்புகளும், கலைச் சொல் அகர வரிசைகளும்.
5. தமிழல்லாத இந்திய மொழிகளில், தமிழ்மொழி, கலை, பண்பாடு பற்றிய முதல் நூல்கள், பெயர்ப்புகள்.
6. ஆங்கிலம், பிரெஞ்சு, உருசியம் முதலிய இந்தோ ஐரோப்பிய மொழிகளிலும் சீனம், சிங்களம், மலாய், சப்பானியம் முதலிய தென் கிழக்காசிய மொழிகளில் முதல் நூல்களும், பெயர்ப்புகளும்.
7. தமிழ் நாட்டு ஓவியம், சிற்பம் முதலிய நுண்கலை பற்றிய விளக்க நூல்கள், படைப்பிலக்கியங்கள்.
8. தமிழ் இசை பற்றிய விளக்க நூல்கள், படைப்பு இலக்கியங்கள்.
9. தமிழ் நடனம், தெருக்கூத்து முதலியவை பற்றிய விளக்க நூல்கள், படைப்பு இலக்கியங்கள்.
10. தமிழ் நாட்டுப்புற இலக்கிய விளக்க நூல்கள், படைப்பு இலக்கியங்கள்.

இப் பரிசுக்குரிய விதிகளை அறிய விரும்புவோர் தன் முகவரி எழுதிய அஞ்சல் உறைகளிற் போதிய அஞ்சல் தலையொட்டி ''பதிவாளர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு'' என்ற முகவரிக்கு எழுதுக.

பண்டைய இந்தியக் கடலக ஆய்வு

புதுதில்லியில் உள்ள தேசிய அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் வளர்கல்விக் கழகமானது (நிஃச்டாடசு) ''பண்டைய இந்தியக் கடலக ஆய்வு'' எனும் திட்டத்தைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் கோழிக்கோடு பல்கலைக் கழகப் பரூக் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொண்டிருக்கிறது. கடலக ஆய்வு பற்றிய பண்டைய இந்தியர்களின் அறிவியல் தொழில்நுட்பச் சிந்தனைகளைத் திரட்டு வதும் அவற்றை ஒழுங்குபடுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், அரபி — மலையாளம், அரபிக், வடமொழி, போர்த்துகீசு மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளி லிருந்தும், அகழாய்வுச் சான்றுகளிலிருந்து கிடைக்கும் கல்வெட்டு நாணயங்கள், பண்டைய கப்பல் கட்டும் தளங்கள் ஆகியற்றிலிருந்தும், கிரேக்க, அரபு, சீன, போர்த்துகீசிய, ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனப் பயணிகளின் குறிப்புகளிலிருந்தும், அக்காலத்திய, பிற தகவல்களிலிருந்தும் இத்திட்டத்திற்குத் தேவை யான மூலக்கூறுகள் திரட்டப்படவிருக்கின்றன. பண்டைய காலம் முதல் கி.பி.1900– ஆம் ஆண்டு வரையிலான பண்டைய கடலக வரலாற்றின் அறி வியல் பாங்கினை வழிவழியாக இந்தியக் கடலக வரலாற்றுப் பின்னணியில் காண்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டம் முன்னரே துவக்கப்பட்டு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. 1·80 இலட்ச ரூபாய் மானியம் தந்துள்ளது. பரூக் கல்லூரியில் நடக்க விருக்கும் திட்டம் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்படும் என்று தெரிகிறது. மேலும் ·5 இலட்சம் மானியம் பெற வாய்ப்புண்டு.

'இந்திய ரயில்வே (வெளிப் பிரிவுகள்) பொது விதிகள் (1976)' நூலின் தமிழாக்கம் பற்றி

திரு கோ. அரங்கநாதன் தமிழாக்கியுள்ள 'இந்திய ரயில்வே (வெளிப்பிரிவுகள்) பொது விதிகள் (1976)' எனும் நூல் கடின உழைப்பில் உருவாகியுள்ள ஒரு மொழிபெயர்ப்பு நூலாகும். இது எளிமையாகவும், புரிந்து கொள்வதில் இடர்ப்பாடின்றியும் அமைந் துள்ளது. இந்நூலில் காணப்படும் கலைச் சொற்கள், வாக்கிய அமைப்புகள் பற்றி அவருடன் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது.

'Superior' என்பதை 'மேலதிகாரி' என்றும் 'மேற்பதவியாளர்' என்றும் குறிப்பிட்டுள்ளார். ஏதேனும் ஒரு சொல்லை மட்டும் பயன்படுத்தலாம் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. 'Approach' என்பதற்கு 'அணுகும்', 'அணுகிய' என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஓரிடத் தில் 'அப்ரோச் நிறுத்தும் சிக்னல்' (Approach stop signal) என்று காணப்பட்டது. இங்கும் 'அணுகி நிறுத்தும் சிக்னல்' எனக் கூறலாம் என்பதை ஏற்றுக்கொண்டார்.

17-10-84இல் புதன் வட்டத்தில் தமது மொழியாக்கம் பற்றிப் பேசியபோது, தமிழில் இரண்டு கலைச் சொற்கள் கிடைக்கும்போது, எழுத்துச்சிக்கனம், எளிமை, புரிதல் இவற்றின் அடிப்படையில் ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்ததாகக் குறிப்பிட்டார்.

—இராம. சுந்தரம்

[illegible], தமிழ் வளர்ச்சி இயக்கம்.

இறங்கு வரிசையில் தேதி எழுதும் முறை

தேதியை எண்ணாலும், எழுத்தாலும் குறிக் கிறோம். 1984-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபத் திரண்டாம் நாள் என எழுத்தால் எழுதுவதை 22-9-1984 என எண்ணால் எழுதுகிறோம். எழுத்தில் ஏறுவரிசையில் அமைந்த தேதி, எண்ணில் இறங்கு வரிசையில் அமைந்து விடுகிறது.

எண்ணில் தேதியை எழுதும் முறை பற்றி அனைத்துலகச் செந்தரமாக்கலுக்கான நிறுவனம் (International Organization for Standardisation) நன்கு ஆய்ந்து இறங்கு வரிசையையே தேர்ந்தெடுத்துள்ளது. (அய்எசு ஒ/ஆர் 2014—1971 நாட்காட்டித் தேதியை முழுதும் எண்ணால் எழுதும் முறை). இதனை இந்தியச் செந்தர நிறுவனமும் (Indian Standards Institution) ஏற்றுக்கொண்டு அய்எசு 7900—1976 எண் கொண்ட செந்தரச் சுவடி ஒன்று வெளியிட்டுள்ளது.

1984—09—22

1984 09 22

19840922

என்றவாறு இடைக் கோடிட்டோ, இடைவெளியிட்டோ அல்லது இடைவெளியில்லாமலோ எழுதலாம்.

இறங்கு வரிசையான தமிழ் முறையில் பின்வரும் நன்மைகளைக் காண்கின்றனர்.

1. கூட்டல், கழித்தல் எளிது. இடைப்பட்ட காலங்களைக் கண்டுபிடிக்க ஏற்ற முறை; கணிப்பொறிகளுக்கும் ஏற்றது.
2. ஆண்டு, திங்கள், நாள் இவற்றினிடையே இடைவெளி விடாமல் ஒரே எண் போன்று கையாள முடியும். ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற பல பெரிய நிறுவனங்களில் இம்முறை பழக்கத்தில் உள்ளதாம்.

தற்போதைய நாட்காட்டி முறை 'கிரிகோரியன் காலண்டர்' எனப்படும். இதைத் தவிர சக, சாலிவாகன, விக்கிரமாதித்த ஆண்டுகளையும் இவ்வாறு எழுதலாம். வேறுபாடு தெரிவதற்காக அந்தந்த ஆண்டு முறையின் முதலெழுத்தைப் போட்டுக் கொள்ள வேண்டும். கிரி கோரியன் கால முறைக்கு முன்னெழுத்து வேண்டாம். தமிழ்நாடு அரசு பின்பற்றும் திருவள்ளுவர் ஆண்டுமுறை இந்திய செந்தரச் சுவடியில் இன்னும் ஏறவில்லை.

தேதியை இறங்குவரிசையில் எழுதுதல் நமது முறை மட்டுமன்று, இந்தியாவிலும், அனைத்துலகிலும் ஏற்கப்பட்ட முறையுமாகும்.

—கொடுமுடி ச. சண்முகன்

செங்கட் படை

முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த உத்தரகோசமங்கைக்கருகில் 'செங்கட்படை' என்ற பகுதி உள்ளது. இது சங்க கால நகர் ஒன்றின் எச்சமாக இருக்கக்கூடும். இப் பகுதியில் ஆங்காங்கே தென்படும் பழைய மதிற் சுவரின் அடிப்பகுதி 1·5 மீட்டர் குறுக்களவு உள்ளது. இச்சுவர் கட்டப் பயன்படுத் தப்பட்ட செங்கற்கள் பெரிய அளவுடையவை; 35 செ.மீ. நீளமும், 20 செ.மீ. அகலமும், 10· செ.மீ. தடிமனும் பெற்றவை. இவை போன்ற செங்கற்கள் காவிரிப்பூம்பட்டினம் அகழாய்வின்போது கிடைத் தன என்பது குறிப்பிடத்தக்கது. இப்பகுதி மேலும் ஆராய்தற்குரியது.

(தகவல் தந்தவர் : பனைக்குளம் வித்துவான் திரு உ. வேணுகோபால பிள்ளை)

—கல்வெட்டியல் துறை

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82x7

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

திருமதி புலவர் திலகம்
3/1709, பிச்சாண்டி முதலி சந்து
மானோசியப்பா வீதி
தஞ்சாவூர்

ஆய்வு மானியம் வழங்கத் திட்ட விவரம் வேண்டல்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், ஆய்வு செய்து அறிக்கைகளை உருவாக்கியளிக்க மானியம் அளிப்பதற்கு விவரம் வேண்டுகிறது. கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், பெயர் பெற்ற ஆய் வாளர்கள் இந் மானியத்திற்கு வேண்டுகோள் விடுக்கலாம். (1) பழஞ்சுவடி பதிப்பித்தல் (2) இலக்கிய இலக்கண வரலாறு (3) மொழி இலக்கிய ஒப்பாய்வு (4) தமிழிசை (5) நாடகம் (6) சிற்பம் (7) மொழியியல் (8) வட்டார வழக்கு (9) தொழிற்கலைச் சொற்கள் திரட்டுதல் (10) பிற மொழிகளில் தமிழின் செல்வாக்கு (11) பிற மாநிலங்களிலும் நாடுகளிலும் வாழும் தமிழர் சமுதாயமும் அவர்களுக்கு நேரும் சிக்கல்களும் (12) திராவிடப் பழங்குடி மக்களின் மொழி, பண்பாடு, நாட்டுப்புறப் பாடல்கள், கலைகள் முதலிய பொருள்களில் ஆய்வு நிகழ்த்தலாம். இந்த ஆய்வு ஆறு முதல் ஒன்பது மாதத்திற்குள் முடிவதாக இருக்க வேண்டும். ஆய்வுத் திட்டம் ஒவ்வொன்றிற்கும் உருவா மூவாயிரம் முதல் ஏழாயிரம் வரை வல்லுநர் குழுவின் முடிவின்படி மானியம் வழங்கப்படும். இறுதி ஆய்வறிக்கை தமிழில் இருத்தல் வேண்டும். பிற மாநில ஆய்வாளர்கள் அறிக்கையைத் தமிழில் பெயர்த்து அனுப்பலாம்.

தன் முகவரி எழுதி 90 காசு அஞ்சல் தலை பதித்த 10×25 செ.மீ. தாளுறையினை "பதிவாளர் (பொறுப்பு), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்" என்ற முகவரிக்கு அனுப்பி ஆய்வுத் திட்டத்திற்குரிய முழுவிளக்கங்களும் தலைப்புகளும் அடங்கிய பட்டியலைப் பெற்றுக் கொள்ளலாம். ஆய்வுத்திட்டம் நிறைவு செய்த பட்டியலை அனுப்ப வேண்டிய இறுதி நாள்: 26.11.84.

கலைச்சொல் வங்கி

தமிழ்ப் பல்கலைக் கழக கலைச்சொல் வங்கி யிலிருந்து வெவ்வேறு துறைகளைச் சார்ந்த கலைச்சொல் வேண்டுவோர் உரிய கலைச்சொற்களைக் கேட்டுப் பெறலாம். இவ்வங்கியிலிருந்து டாக்டர் நரேந்திரன் பெற்ற கலைச்சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1) irrigation - குடல் கழுவுதல்; 2) jijunostomy - நடுச்சிறுகுடல் திறப்பு; 3) nephrostomy - சிறுநீரகத் திறப்பு; 4) ostomy - திறப்பு; 5) obstruction - தடை; 6) appliance - கருவி; 7) cecostomy - பெருங்குடல் திறப்பு; 8) colectomy - பெருங்குடல் நீக்கம்; 9) colonic conduit - பெருங்குடல் சேமிப்பி; 10) excoriation - தோல் பொரிதல்; 11) fistula - புரை; 12) vesicostomy - சிறுநீரகப் பை திறப்பு; 13) stoma - திறவை; 14) stenosis - குடல் குறுக்கம்; 15) stricture - பகுதிக் குறுக்கம்; 16) urinary diversion - சிறுநீர்த் திருப்பம்; 17) peristalsis- குடல் அலைவு; 18) prolapse - உறுப்பு தள்ளுதல்; 19) revision - மாற்றறுவை

(இச் சொற்கள் புதியதாகச் சொல்லாக்கம் செய்யப்பட்டவை. இந்தச் சொல்லாக்க விவாதத்தில் டாக்டர் நரேந்திரன், டாக்டர் இராம.சுந்தரம், டாக்டர் ஜோசப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.)

—கலைச்சொல் வங்கி

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

சட்ட இயல்

சட்ட இயல்	நூலகப் பதிப்பு	ரூ.92/—
	மாணவர் பதிப்பு	ரூ.36/—
நீலகேசி		ரூ.140/—
தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்		ரூ.155/—

வினா:

நூல்களின் விலை ஏன் கூடுதலாக உள்ளது?

விளக்கம் :

புதுதில்லியில் பதிப்பிக்கப்பட்டு வந்த மறு தோன்றி நிழற்பட அச்சு முறையில் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புகள் உருவாகின்றன.

உயர்ந்த தாளில் அச்சிடப்படுகின்றன.

முழுக்காலிக்காவில் உறுதியான நூற்கட்டுடன் உருவாகின்றன.

பல நூற்றுக் கணக்கில் விலை கொடுத்து ஆங்கில நூலை வாங்கி மதிக்கும் போது அரிய தமிழ் நூல்களை ஓரளவு அதிக விலையில் வாங்கித் தமிழுக்கு மதிப்புத்தர மனம் மறுப்பானேன்.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.

அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் — 613001